119

தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 26உ வெள்ளி (10—8—56) ★ ★ வெளியூர் : ஆடி 27உ சனி (11—8—56) [இதழ் 52

ஐந்தாண்டுத்திட்ட விளம்பரத்திற்கு இசைத் தட்டுகளாம்

புதுடில்லி, ஆக. 9—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் குறித்து விளம்பரம் செய்ய திட்டக் குழு பல வழிகளை மேற்கொள்ளப் போவதாக அறிவித்திருந்ததல்லவா? இப்போது அவற்றுள் ஒன்றாக 'கிராமபோன் ரிக்கார்டு'கள் மூலம் திட்டத்திற்கு விளம்பரம் செய்வது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்களாம்.

திட்டத்தின் பல்வேறு அம்சங்களை விளக்கும் 20 இந்திப் பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளனவாம்—இந்த ரிகார்டு

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை மந்திரி சபை இழைத்த துரோகம்!

'தமிழ்நாடு' என பெயரிட மறுப்பதற்கு டெல்லி காரணமாகக் காட்டுகிறது

'சென்னை சட்டசபையும் கோரவில்லை— நாங்களும் ஏற்க மாட்டோம்'

மத்திய உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் கூற்று

'சென்னை சட்டசபையினர் கோரவில்லை—நாங்களும் ஏற்கவில்லை' என்று கூறியிருக்கிறார் பண்டித பந்த்—'சென்னைக்குத் தமிழ் நாடு எனப் பெயரிடவேண்டும்' என்று கேட்டதற்கு!

தமிழர்களுக்கு, சென்னை மந்திரி சபை இழைத்த துரோகத்தைக் காரணமாகச் சுட்டிக்காட்டி டில்லி சர்க்காரும். சென்னைக்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடவேண்டும் என்ற தமிழ் மக்களின் ஒருமுகப்பட்ட கோரிக்கையை நிராகரித்திருக்கின்றனர்.

மாநில புது அமைப்பு மசோதாவிற்கு, 'சென்னையின் பெயரை தமிழ் நாடு என்று மாற்றவேண்டும்' என்று திருத்தம் ஒன்று மக்கள் சபையில் கொண்டுவரப்பட்டபோது, அதனை நிராகரித்துப் பேசுகையிலேயே உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் அவ்வாறு குறிப்பிட்டாராம்.

'மைசூரின் பெயரை கர்நாடகம் என்று மாற்றவேண்டும்' என்ற திருத்தத்தையும் அவர் ஏற்க மறுத்தாராம்.

ஆனால், மைசூர் சட்டசபையின் உறுப்பினர் எண்ணிக்கையை மேலும் 26 ஆக உயர்த்துவதற்கு மட்டும் அவர் ஒப்பினாராம்.

ஆந்திரா-சென்னை எல்லைத் தகராறு

தீர்வு காணுவதில் காலதாமதம்

ஆந்திர மந்திரிசபைமீது தமிழ் உறுப்பினர் கண்டனத் தீர்மானம்

கர்னூல், ஆக 9—

'டில்லி சர்க்கார் ஒரு ஒரேவகையான கொள்கை வகுக்கும் வரை காத்திருக்க வேண்டும்' என்று கூறி, சென்னைக்கும்—ஆந்திரத்திற்கும் இடையேயுள்ள எல்லைத்தகராறுக்குத் தீர்வு காணுவதை காலதாமதப்படுத்துவதற்காக ஆந்திர சர்க்காரைக் கண்டிக்கும் வகையில், கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு ஆந்திர சட்டசபையில் உள்ள தமிழ் உறுப்பினர் ஒருவர் திருத்தம் ஒன்று கொண்டு வந்திருக்கிறார்.

திருத்தத்தைக் கொண்டு வந்துள்ள எஸ். அரங்கநாத முதலியார், 'ஆந்திராவில் உள்ள தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டும்' என்ற விவகாரத்தை தேர்தல் பிரச்சினையாக்கி, ஆந்திர—சென்னை எல்லையில் உள்ள சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணபுரம் தொகுதியில் வெற்றி பெற்றவராவார்.

சர்க்கார் மருத்துவமனைத் தொழிலாளர் சட்டசபை நோக்கிப் படையெடுப்பர்

கோரிக்கைகளை வலியுறுத்த நடவடிக்கை

தரப்பட்டுவந்த வீட்டு வாடகை நிறுத்தப்பட்டதற்குக் கண்டனம் தெரிவிப்பர்

சென்னை, ஆக. 10—

சென்னை சர்க்கார் ஸ்டான்லி மருத்துவமனை ஊழியர்கள் சுமார் 300 பேர் சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தவும், இதுகாறும் தரப்பட்டுவரும் வீட்டு வாடகை போன்ற அலவன்சுகள் அநியாயமாக வெட்டப்பட்டதை எதிர்த்தும், இதர குறைகளை முறையிடவுமாக நாளை (11—8—56) ஊர்வலமாகப் புறப்பட்டு, சட்டசபைக்குச் சென்று, 'மகஜர்' தரப்போவதாக ஊழியர் சங்கம் அறிவித்திருக்கிறது.

இதுவன்றி, இத்திங்கள் 1-ம் தேதியன்று, ஸ்டான்லி மருத்துவமனை ஊழியர்களுடைய ஜூலை மாத ஊதியம் தரப்படுகையில், அங்குள்ள சுமார் 300 பேருக்கு, வழக்கம்போல் தரப்படும் வீட்டுவாடகை அலவன்ஸ் நிறுத்தப்பட்டதாம். வீட்டு வாடகைக்கெனத் தனியாக வேறு அவர்களுடைய சம்பளத்தில் 10 சதவிகிதம் வழக்கமாகப் பிடிக்கப்பட்டு வருகிறது. தங்களுக்கு எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் திடீரென அநியாயமாக நிறுத்தப்பட்ட இந்தச் சம்பள வெட்டை ஏற்றுக்கொள்ள மறுத்து இத்திங்கள் 1-ம்தேதியன்று தங்களுக்குத் தரப்பட்ட சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதென மறுத்துவிட்டிருக்கின்றனர்—இன்னும் அவர்கள் ஊதியம் பெற்றுக்கொள்ளவில்லை.

வீடுகள் தரப்பட்டிருக்கும் ஊழியர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் தரமுடியாதென சர்க்கார் தெரிவித்திருப்பதாகவும், ஆனால், தங்களுக்கு இன்னும் அதிகப்படியான வசதிகள் தேவை என்று அவ்வூழியர்கள் போராடிக்கொண்டிருக்கும் நேரத்தில் திடீரென முன்னறிவிப்பு எதுவுமின்றி வீட்டு வாடகை அலவன்சை நிறுத்திவிட்டதானது ஊழியர்களிடை அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர்கள் சார்பில் கூறப்படுகிறது.

கடந்த 2-ம் தேதியன்று, சங்கத் தலைவர் எஸ். பி. ஆதித்தன், துணைத் தலைவர் டி. ஆர். கணேசன், செயலாளர் எஸ். கே. சாமுவேல் ஆகியோர் இது விஷயமாக மாநில சுகாதார அமைச்சரைச் சந்தித்து, மருத்துவ மனை ஊழியர்களுக்கு வீட்டு வாடகை அலவன்சைக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டதாகவும், இன்னும் அது குறித்து சர்க்கார் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லையென்றும், பின்னர் கடந்த 7-ம் தேதியன்று ஸ்டான்லி மருத்துவமனை ஊழியர்களனைவரும் அம் மருத்துவ மனைத் தலைமை அதிகாரியிடம் தங்கள் குறைகளைக் கூறி முறையிட்டுக் கொண்டதாகவும், அவர், தமக்கு சர்க்காரிடமிருந்து இதுவரை எவ்வித உத்தரவும் கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அகமதாபாத் சம்பவங்கள் 'பம்பாயை' மிஞ்சுகின்றன?

போலீசாரின் மூர்க்கத்தனமான அடக்குமுறை

மேலும் பலர் பலி: நூற்றுக்கணக்கான பேர்களுக்குக் காயம்

அகமதாபாத், ஆக. 9—

அகமதாபாத் நகரம், இன்று 'பம்பாயை' மிஞ்சிய காட்சிகளுக்கு நிலைக்களனாகியிருக்கிறது.

இருமொழி பம்பாய் மாநில அமைப்பிற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள மக்கள் கூட்டத்தைப் போலீசும்—இராணுவமும் துரத்தித் துரத்தி, அடக்குமுறைகளை ஏவி அடக்கிவிட முயற்சித்திருக்கின்றன.

போலீசார் 'மிஷின்' துப்பாக்கிகளை முடுக்கிவிட்டு, 89 இரவுண்டுகள் சுட்டிருக்கின்றனர்; இதன் விளைவாக இன்று 5 பேர் பலி கொள்ளப்பட்டிருக்கின்றனர். நேற்றுத் துவங்கிய ஆர்ப்பாட்டங்களினால், இதுவரை மொத்தம் 12 பேர் உயிரிழந்திருப்பதாகத் தெரியவருகிறது.

நகரில் பகல் 2 மணி முதல் ஊரடங்குச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

ஊழியர் நம்பிக்கையில் சர்க்கார் மண் தூவுகிறது

உறுதிமொழி ஏதும் தரப்படவில்லையாம்!

கடமை தவறினால் நடவடிக்கை எடுப்பார்களாம்

சென்னை சட்டசபையில் நிதி மந்திரியின் சவடால்

சென்னை, ஆக. 9—

"சர்க்கார் ஊழியர் தூதுக்குழு அண்மையில் முதன் மந்திரியைச் சந்தித்தபோது, தூதுக் குழுவினருக்கு முதன் மந்திரி எந்தவித உறுதிமொழியும் வழங்கவில்லை" என்று, நிதி மந்திரி சுப்பிரமணியம் சென்னை சட்டசபையில் கூறியிருக்கிறார்.

"சர்க்காருக்கு, ஊழியர் மாநாட்டுத் தீர்மானங்கள், ஊழியர் சங்க அறிக்கைகள் எல்லாம் கிடைத்தன; அவற்றில், அவர்கள் சம்பளம் மற்றும் கிராக்கிப்படி இவை உயர்த்தப்பட வேண்டுமெனக் கோரியுள்ளனர். கிராக்கிப்படியை உயர்த்துவது பற்றி சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறது" என்று நிதியமைச்சர் கூறினாராம்!

சட்டசபையில், ஊழியர்களின் சம்பள உயர்வு குறித்து 'எட்டு' கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன; அவற்றிற்குப் பதிலளிக்கும்போது, மந்திரி மேலும் சொன்னதாவது:—

"நிதி நிலைகளைக் குறித்து சர்க்கார் கவலைப்பட வேண்டியவர்களாக உள்ளனர். ஒரு ஊழியருக்கு மாதம் ஒரு ரூபாய் அதிகம் தந்தால், சர்க்கார் ரூ. 24 இலட்சம் செலவிட வேண்டியுள்ளது. இதற்கு பணத்திற்கு எங்கே போவது?"

"சர்க்கார் ஊழியர்கள் அதிருப்தி அடைந்த நிலையில், வரப்போகும் பொதுத் தேர்தலில் ஒத்துழைக்கமாட்டார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா?"

என்று காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பினர்.

மந்திரி அதற்குப் பதில் கூறும் போது ஊழியர்களை மிரட்டியிருக்கிறார்

"என். ஜி. ஓ.க்கள் மட்டுமல்ல; பொதுவாகவே மக்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதை சர்க்கார் உணர்ந்தே இருக்கிறது. இது, நமது வறுமையின் விளைவு. இதனால், சர்க்கார் ஊழியர்கள் தேர்தலில் ஒத்துழைக்கமாட்டார்கள் என்பது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. ஊழியர்கள் தங்கள் வேலைகளைச் செய்வர்; அதற்காகவே அவர்களுக்குச் சம்பளம் தரப்படுகிறது. அவர்கள் கடமை தவறினால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சர்க்காரிடம் வழிவகைகள் உண்டு."

"முதன் மந்திரி, எந்தவித உறுதிமொழியும் ஊழியர் தூதுக் குழுவிற்குத் தரவில்லையா?" என்று, உறுப்பினர் பலர் கேட்டபோது, மந்திரி, 'இல்லவே இல்லை' என்று கூறியிருக்கிறார்.

"காமராசர் வழக்கமாகவே, 'ஆகட்டும், பார்க்கலாம்' என்பாரே! அப்படிக்கூடக் கூறவில்லையா!" என்று சிரிப்பிற்கிடையே கேட்கப்பட்டதற்கு, மந்திரி பதிலேதும் கூறவில்லையாம்!

நம் நாடு

சென்னை 10-8-'56 வெள்ளி

சொல் வேறு செயல் வேறு!

'சில சந்தர்ப்பங்களில் காங்கிரஸ், தேர்தலுக்கு ஆள் பொறுக்கும்போது, சாதிய அடிப்படையை மேற்கொள்ளுகிறது; இந்தப் பலவீனத்திலிருந்து காங்கிரஸ் விடுபட்டாக வேண்டும். இது, அரசியலிலிருந்து சாதிப்பித்தையும், மதப்பித்தையும் ஒழிக்க வேண்டும் என்ற நமது நோக்கத்தின் நேர்மையை மக்கள் சந்தேகிப்பதற்கு வழி செய்கிறது' என்பதாக ஐதராபாத்தில் அண்மையில் கூடிய காங்கிரஸ் கிளை மாநாடு ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ், எப்படியேனும் தங்கள் கையில் சிக்கிவிட்ட ஆட்சிப் பொறுப்பை எவரும் தட்டிப் பறித்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வதற்காக—தேர்தலில் எப்படியேனும் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக, எத்துணை கீழ்த்தரமான செயல்களையும் மேற்கொள்ளத் தயங்காது என்பதற்கு இந்தத் தீர்மானம் துல்லியமான எடுத்துக் காட்டாகும்.

மக்களில் விழிப்புப் பெற்றிருப்போர், காங்கிரசின் இந்தப் போக்கினைத் தெளிவாக உணர்ந்துதான் இருக்கின்றனர். காங்கிரசின் போக்கு குறித்துக் காங்கிரசல்லாதவர் கூறிடுவதைவிடக் காங்கிரசாரே கூறிடுவது, மக்களில் மேலும் பலர் விழிப்புற உதவுவதாகும்.

'தேர்தலுக்கு ஆள்பொறுக்குவதில் காங்கிரசார், சாதி அடிப்படையைக் கைக்கொள்ளுகின்றனர்' என்று கூறுகிறது தீர்மானத்தின் முதல் பகுதி.

சாதிய உணர்வுகளிலிருந்து விடுபட விருப்பமிருப்பினும் துணிவு பெருத மக்கள் சிலர் உண்டு. பழைமையில் ஊறிப்போய், சாதிகள் நிலவத்தான் வேண்டுமென்போர் உண்டு. பழைமையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள ஒரு புறமும், புதுமையை வரவேற்கும் உள்ளக் கிளர்ச்சியும் கொண்ட இரண்டுங் கெட்டான் நிலையிலிருப்போரும் இருக்கிருர்கள். இப்படி மக்களில் பெரும்பகுதியினரிடம் ஒன்றிப்போய்க் கிடக்கும் சாதி உணர்வுகளைப் பெருக்கி, அவற்றை வெறியாக்கி, தேர்தல் வெற்றிக்கு மூலதனமாக்கிடும் கீழ்த்தரமான பணியைக் காங்கிரஸ் கண்ணியவான்கள் கடந்த எட்டாண்டுக் காலத்தில், இடத்திற்குத் தக்கவாறு, கிராமப் பஞ்சாயத்துக்கள் தேர்தல் முதல் டில்லி மக்கள் சபைத் தேர்தல் வரை பாரபட்சமின்றி கைக்கொண்டு வந்திருக்கின்றனர்.

காங்கிரசின் இன்றைய குருநாதனாக விளங்கும் நேரு பெருமான் இந்தச் சாதி முறையைக் குறித்துக் கண்டித்துப் பேசாத பொதுக்கூட்டங்கள் கிடையவே கிடையாது. அவரைப் பின்பற்றி நகவாரியாக உள்ள காங்கிரஸ் தலைவர்களும் அணிகளும், 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று இராகம் போட்டுப் பாடி வருகின்றனர். ஆனால் இவையெல்லாம், உதட்டளவோடு சரி; நடைமுறையில் காங்கிரஸ் எப்படி நடந்து கொள்கிறது என்பதற்கு, ஐதராபாத் மாநாட்டுத் தீர்மானம் சாட்சி பகருகிறது.

சாதிமுறைக் கேட்டினை ஒழிக்கவேண்டும் என்று கூறிடும் காங்கிரஸ் தலைவர்களின் நேர்மையை நாம் சந்தேகிக்காவிடினும், மக்கள் சந்தேகிக்கிருர்கள் என்ற உண்மையையும் இந்தத் தீர்மானம் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

காங்கிரஸ், சாதிக் கேட்டினை ஒழிக்கவேண்டும் என்று கூறிக்கொண்டே சாதிவெறிக்கு ஆக்கமளிக்கும் நடைமுறையைக் கைக்கொண்டிருப்பது, சமுதாய முன்னேற்றத்திற்கு அவர்கள் துரோகமிழைத்து வருவதை உலகிற்குச் சொல்லுவதாகும்.

இந்தத் துரோகமிழைப்பவர்களை சமுதாய முன்னேற்றத்திற்காக—சாதிமுறைக் கேடுகள் போன்ற தீமைகள் அகலுவதற்காகப் பல்காலமும் பாடுபட்டுவரும் உண்மையான சீர்திருத்தவாதிகள், எதிர்காலத்தில் பழிதீர்த்துக்கொள்ளத் தவறமாட்டார்கள்.

காங்கிரசின் சொல்வேறு—செயல்வேறு என்ற போக்கு, நெடுநாளைக்கு அவர்களைக் காப்பாற்றிக்கொண்டிருக்கும் வல்லமையற்றது என்பதையும் காங்கிரஸ் உணர்வது நல்லது.

தேர்தலில் வெற்றி பெறுவது என்ற ஒரு குறுகிய நோக்கத்திற்காகக் காங்கிரஸ், எந்தக் கேடுகள் களையப்பட வேண்டியனவோ அந்தக்கேடுகளுக்கு உரமிட்டு, அவற்றின் வளர்ச்சிக்கு ஆக்கந்தேடுவது, எதிர்காலச் சந்ததியினரால் மன்னிக்க முடியாத ஒரு குற்றமாகும் என்பதைக் காங்கிரசார் உணர்வது அவர்களுக்கும் நல்லது—நாட்டுக்கும் நல்லது.

சாதிமுறைக் கேட்டை ஒழிப்பதுபற்றி காங்கிரசின் கருத்திற்கும் நமது கருத்திற்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உண்டென்ருலும், காங்கிரசின் சொல்வேறு செயல்வேறு என்ற போக்கினைச் சுட்டிக் காட்டவே—மக்கள் தெளிவாக உணர்ந்து கொள்ளவே இதனை எழுதுகிருேம்.

காங்கிரஸ் கிளையின் ஐதராபாத் மாநாட்டுத் தீர்மானம், காங்கிரசாருக்கு— குறிப்பாகத் தென்னட்டு ராஷ்டிரபதிகளுக்கு பாடம் புகட்ட வேண்டும என்று விரும்புகிருேம்.

மரியாதை வாரம்

பல சர்க்கார் நிறுவனங்களும் கொண்டாடுகிற மரியாதை வாரம் இப்போது போலீசாரால் கொண்டாடப்படுகிறது.

சென்னை நகரில், போலீசார் மரியாதை வாரத்தினை கமிஷனர் பார்த்தசாரதி ஐயங்கார் துவக்கி வைத்திருக்கிருர்.

'போலீசாருக்கும் —பொதுமக்களுக்கும் இடையில் நல்லெண்ணம் நிலவ வேண்டியது அவசியம்' என்று அவர் வற்புறுத்திக் கூறினராம்.

'நான் பொதுமக்களிடத்தில் மரியாதையுடன் நடந்துகொள்வேன்' என்று போலீசார் உறுதிமொழி எடுத்துக் கொண்டனராம்.

சிங்கப்பூரின் எதிர்காலம்

முதன் மந்திரி நம்பிக்கை

சிங்கப்பூர் ஆக. 9—

சிங்கப்பூரின் எதிர்காலம் குறித்த அடுத்த அரசியல் திட்டப் பேச்சு வார்த்தைகள் தோல்வியுருதெனத் தான் நம்புவதாக சிங்கப்பூர் முதன் மந்திரி லிம்யீஹாக் தெரிவித்திருக்கிருர்.

'பேச்சு வார்த்தை முறியக் கூடாதென்பதில் சிங்கப்பூர் மக்கள் எத்தனை அக்கரை கொண்டிருக்கிருர்களோ அவ்வளவுக்கு பிரிட்டிஷ் காலனி மந்திரியும் கொண்டிருப்பதை உணர்ந்தேன்' என்றும் அவர் கூறியுள்ளார்.

'கடந்த எப்ரல் திங்களில் சிங்கப்பூர் எழுப்பியிருந்த கோரிக்கையிலிருந்து எந்தவகையிலும் நாம் பின் வாங்குவதாக இல்லை' என்றும் அவர் கூறியிருக்கிருர்.

மலேயா பல்கலைக் கழகம்

இந்தியக் கலைப் பகுதிக்கு இந்தியாவின் நன்கொடை

சிங்கப்பூர், ஆக. 9—

மலேயா பல்கலைக் கழகத்திலுள்ள இந்தியக் கலைப் பிரிவுக்கு இந்தியாவின் நன்கொடையாக ரூ 10,000 கொண்ட 'செக்' ஒன்றை இந்தியக் கமிஷனர் ஆர். கே. டாண்டன், மலேயா பல்கலைக் கழகத் துணை வேந்தரிடம் தந்துவிட்டு சொன்னதாவது:—

"மலேயா சர்வகலாசாலையைத் தென்கிழக்காசியாவிலேயே முக்கியமானதொரு கல்வி பீடமாக அமைப்பதற்குத் தாங்கள் எடுத்து வந்துள்ள தாராள முயற்சியின் பலனாகவும் தாங்கள் காட்டிவந்த பேரார்வத்தின் பலனாகவும், அந்தப் பிரிவு இவ்வருடம் ஆரம்பமாகிவிட்டது; பிரபல தமிழறிஞர் பேராசிரியர் இராசாகண்ணு அவர்கள் இந்தப் பிரிவுக்கு தலைவராக வருகிருர் தாங்கள் இதற்காக எடுத்துள்ள இப்பெரும் முயற்சிக்கு நான் என் மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

'சுபாஷ் இறந்தது உண்மையே'

விசாரணைக் குழு தீர்ப்பு?

புதுடில்லி—

இரண்டாம் உலகப் பெரும் போரின்போது சுபாஷ் சந்திர போஸ் பார்மோசா தீவில் இறந்துபட்டதாக அதிகாரபூர்வமாக தகவல் கிடைத்திருக்கிறதென்று சுபாஷ்போஸ் விசாரணைக் குழு தெரிவித்திருக்கிறதாம்.

இந்த வெள்ளியன்று, குழுவின் தலைவரான ஷா நவாஸ்கான், பிரதமர் நேருவிடம் அறிக்கையைத் தாக்கல் செய்வார் என்று தெரிய வருகிறது.

ஷா நவாஸ்கான், சுபாஷின் தேசிய விடுதலை இராணுவத்தில் மிகப் பெரிய அதிகாரியாக இருந்தவர்; இப்போது இரயில்வே இலாகா மந்திரியின் பார்லிமெண்டரி செயலாளராக இருக்கிருர்.

குழுவினர் இந்தியா, ஜப்பான், தாய்லாந்து ஆகிய இடங்களில், சுமார் 70 பேர்களை விசாரித்தனர் என்றும், இவர்களில் 66 பேர் சுபாஷ் இறந்துவிட்டதாகவே கூறியிருக்கின்றனர் என்றும், இறக்கவில்லை என்று நம்புபவரில் இருவர் சுபாஷின் குடும்பத்தவர் என்றும், சுபாஷ் போசுடன் விமானத்தில் சென்ற 6 பேர்களும் சுபாஷ் இறந்ததாகவே சாட்சியம் கூறியிருக்கின்றனர் என்றும், விபத்திற்குப் பிறகு போசுக்கு சிகிச்சை செய்த டாக்டரும் சுபாஷ் இறந்ததை உறுதி செய்திருப்பதாகவும் குழு தனது அறிக்கையில் கூறியிருக்கிறதாம்.

இந்தியாவில் 1955-ல் ரூ. 6,28,500 மதிப்புள்ள எண்ணெய் ஆலை இயந்திர சாதனங்கள் தயாரிக்கப்பட்டன.

'இருமொழி மாநிலக் கொள்கை புதிய சிக்கலைத் தோற்றுவிக்கும்'

'பம்பாய் திட்டம் சிறப்பான பயன்பெருது'

'சிக்கல் தொடங்கிய இடத்திற்கே திரும்பியுள்ளது'

டில்லியின் போக்கிற்குக் கண்டனம்

"......பொதுவாகக் கூறுமிடத்து இருமொழி மாகாணக் கொள்கை புதிய சிக்கல்களைத் தோற்றுவிக்கிறதாயிருக்கிறதேயொழிய, உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதாயில்லை. மற்றப் பகுதிகளில் வேரறுக்கப்பட்ட இக்கொள்கைக்கு பம்பாயில் மீண்டும் வித்திடுவதற்குச் செய்யும் முயற்சி சிறப்பான எப்பயனையும் பெருதென்று வற்புறுத்த விரும்புகின்ருேம்.

"இவ்விரு மொழி மாகாணக் கொள்கை மற்றப் பகுதிகளிலுள்ள அமைதியையும் குலைப்பதாயிருக்கிறது. இந்தியாவின் மேற்குப் பகுதியில் இருமொழி மாகாணம் உருவானல், தென் பகுதியில், தட்சிணப் பிரதேசக் கொள்கையை ஆதரிக்கும் சிறுபான்மைக் கூட்டத்தினருக்குப் பெருக்கம் தோன்றி, இங்குள்ள காங்கிரசுக் கட்சியில் பிளவு ஏற்படும்; கட்சிப் பிளவுகளால் அமைச்சரவை மாறுதல்கள் ஏற்பட்டு, குடியரசுத் தலைவரின் நேரடியான ஆட்சி தோன்றும் நிலைமை இங்கும் ஏற்படும் தன்மையைச் சிலர் உண்டாக்கிவிடுவார்கள். மேலும், மொழிவழிக் கொள்கையை முறியடிப்பதால், இந்தி மொழி ஆதிக்க வல்லாட்சியாளர்கள் வெற்றிபெறுவதற்கு நல்வாய்ப்பு கிடைக்கும்.

"இருமொழி மாகாணக் கொள்கையை மீண்டும் மகாராட்டிரத் தலைவர்கள் எதிர்த்திருக்கிருர்கள்; குசராத்தியத் தலைவர்களும் கண்டித்திருக்கிருர்கள். ஐக்கிய மகாராட்டிர இயக்கத் தலைவர்களுள் ஒருவரான திரு என். வி. காட்கிலும், செயலாளராகிய திரு எஸ். எம். ஜோஷியும், 'அரசினருடைய முடிவை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்' என்று விளக்கமாகக் கூறியிருக்கிருர்கள். ஒரு மொழி மாகாணம்தான் மக்களாட்சிக் கொள்கையின் குறிக்கோளை நிறைவேற்றுவதாகும் என்றும், இருமொழி மாகாணம், சாதி மனப்பான்மையையும் வகுப்புவாதத்தையும் வளர்ப்பதாகுமென்றும் அவர்கள் எச்சரிக்கை செய்திருக்கிருர்கள். குசராத்தியத் தலைவர்களும் இவ்வாலோசனையினுல் நேரும் தீமைகளைக் குறிப்பிட்டிருக்கிருர்கள். பெரும்பான்மையான சமுதாயமாகிய மகாராட்டிரர்களுடைய ஆட்சியின்கீழ் தமக்கு அரசியல் அமைதி கிடைக்காதென்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள்."

—என்று, 9—8—56 'தமிழ்நாடு' இதழ் தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் கூறுவதாவது:—

"பம்பாய் நகரச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இருமொழி மாகாண அமைப்பே சிறந்ததென்று இந்திய அரசாங்கம் முடிவு கூறியிருக்கிறது. இம்முடிவின் சிறப்பைக் குறித்து, உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் பாராளுமன்றத்தில் வானளாவிப் புகழ்ந்திருக்கிருர். இந்தியாவினுடைய ஒற்றுமையையும் அமைதியையும் பாதுகாப்பதற்கு இதுதான் சிறந்த வழியென்றும், சமுதாயத் துறையில் உரிமையும் நேர்மையும் ஒருங்கே பாதுகாக்கப்படுவதற்கு அது பெரிதும் உதவி செய்யுமென்றும் அவர் கூறியிருக்கிருர். 'பம்பாய், மகாராட்டிரம், குசராத் ஆகிய பகுதிகளைச் சேர்த்து ஒரு மாகாணமாக அமைக்க வேண்டுமென்பது ஒரு புதிய ஆலோசனையல்ல; முதன் முதலில் கூறப்பட்ட இவ்வாலோசனையை மகாராட்டிரர்களும், குசராத்தியர்களும் எதிர்த்திருக்கிருர்கள். மொழி வழிக் கொள்கை அடிப்படையில் தனித் தனி மாகாணங்கள் அமைக்க வேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கம்; மற்ற மாகாண மக்களின் நோக்கமும் அதுவேயாகும். ஆனல், இந்திய அரசாங்கம் தனக்கென ஒரு தனிக் கொள்கை வகுப்பதற்கு முனைந்து நின்றது. மொழி வழி அடிப்படையில் மாகாணங்கள் உருவாக்கப்பட்டால், அது இந்திய அரசாங்கத்தின் வல்லாட்சி நடைமுறைக்குப் பேரிடையூருக விளங்குமென்றும், இந்தியா முழுவதும் இந்தி மொழியையே அனைத்திந்திய மொழியாகச் சுமத்தும் முயற்சிக்குப் பெருந்தடையாக இருக்குமென்றும் புதுடில்லி அரசினர் அஞ்சினர்கள்.

"ஆனல், அவர்களுடைய அச்சத்தைவிட மக்களுடைய விருப்பத்திற்கே அதிக வலிமை இருந்தது. அதனல், இம்மொழி மாகாணக் கொள்கை எதிர்க்கப்பட்டது மக்கள் எதிர்ப்பின் வலிமையை உணர்ந்த இந்திய அரசினர் அக்கொள்கையைக் கைவிட்டு, பம்பாய் நகரத்தை ஒரு பொதுச் சிக்கலாகக்கொண்டு, அதைத் தம்முடைய நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரவேண்டும் என்று தீர்மானித்தார்கள். இத்தீர்மானம் மகாராட்டிர மக்களுடைய எதிர்ப்பு உணர்ச்சியை அளவுக்குமீறிய தன்மையில் எழுப்பிவிட்டது. பம்பாய் நகரில் நடந்த கலகங்களும் குழப்பங்களும், இந்திய அரசினருக்கு ஒரு பெரிய எச்சரிக்கையாகத் தோற்றமளித்தன. மக்களுடைய கருத்திற்கும் அரசினருடைய கொள்கைக்கும் இடையேயுள்ள பெருவெளியைக் குறைப்பதற்கும் பல முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனல், அரசினர் தம்முடைய பிடிவாத மனப்பான்மையைக் கைவிடுவதற்கு இணங்கவில்லை; இதன் காரணமாக, இந்திய அமைச்சரவையிலேயே ஒரு மாறுதல் ஏற்பட நேர்ந்தது. அதன் விளைவாக நிகழ்ந்த பாராளுமன்றப் பேச்சுக்கள், ஒரு பெரும அவலநிலையை வெளிப்படுத்திவிட்டன. இந்திய அமைச்சரவையில் ஆலோசித்துத் தீர்மானிக்கப்படாத சிக்கல்கள், இந்தியப்பேரரசின் முடிவுகளாக அறிவிக்கப்பட்ட முறை பாராளுமன்ற ஒழுங்கிற்கும் மக்களாட்சிக் கொள்கைக்கும் புறம்பானது என்று நிரூபிக்கப்பட்டது. இதனல் நேர்ந்த பரபரப்பின் காரணமாக, மாகாணப் புனரமைப்புக் குழு அறிக்கையின் மீது நடைபெற்ற வாதத்தில் சமரசமான ஒரு முடிவு காண வேண்டுமென்ற முயற்சி தொடங்கப்பட்டது

"இம்முயற்சி அரசினரின் பழைய ஆலோசனையைப் புதுப்பித்ததேயொழிய வேறொன்றும் செய்யவில்லை. 'வேதாளம் பழைய படியும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது' என்பதுபோல, அரசினர் மீண்டும் இருமொழி மாகாணக் கொள்கையைப் பிடித்துக் கொண்டிருக்கிருர்கள்.

"வங்காளம்—பீகார் இணைப்பு முயற்சி தோல்வியுற்று, தமிழ்நாடு—கேரள ஐக்கிய ஆலோசனை வீழ்ச்சியுற்று, மொழிவழிகொள்கைக்கு நேரிடையூருன இருமொழி மாகாணத் திட்டம் அடியோடு தொலைந்தது என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, பண்டித பந்தினுடைய அறிவிப்பு, இந்திய அரசியல் அமைதியை மீண்டும் கலக்கிக் குழப்புவதாயிருக்கிறது. சுற்றிச் சுற்றி, முடிவில், தொடங்கிய இடத்திற்கே, சிக்கல் திரும்பி வந்திருக்கிறது."

சென்னை சர்க்கார் ஊழியர்கள் சம்பள உயர்வு பெற சம்பத் கூறும் வழி

தேர்தலில் ஒத்துழைக்க மறுக்க வேண்டும் என்கிறார்

மதுரை, ஆக. 10—

"மத்திய அரசாங்கத்தில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு அதிகப்படியான சம்பளம் வழங்கப்படுகையில், சென்னை மாகாண அரசாங்க ஊழியர்களுக்கு மட்டும் குறைந்த சம்பளம் கொடுக்கப்படுவானேன்? அடுத்து வரும் பொதுத் தேர்தலுக்குள் சென்னை மாகாண அரசாங்க ஊழியர்களுக்கும் அதிகப்படியான சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்; இல்லையேல், தேர்தலில் ஒத்துழையாமையை மேற்கொள்ள வேண்டுமென்று அரசாங்க ஊழியர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்,"

என்று, 6—8—56ல் மதுரை தி மு. கழகச் சார்பில், பழனி டாக்கீசில், மாவட்டச் செயலாளர் எஸ் முத்து தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், 'எதிர்ப்புகள்' என்ற தலைப்பில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் சொன்னது:—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டிற்குரிய பங்கு ஒதுக்கப்படவில்லை. சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை அமைக்கப்படுமானால் ரூ. 10 கோடி வழங்குவதாக முன்வந்த ருசிய அரசாங்கத்தின் உதவியை இந்திய அரசாங்கம் புறக்கணித்து விட்டது. 'தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது' என்று புள்ளி விவரங்களுடன் தி. மு. கழகம் கூறியிருந்தும், அவற்றை அமைச்சர்கள் எவரும் மறுக்கவில்லை; ஆனால் வட இந்திய அமைச்சர்களிடத்தில் சென்று தங்கள் மாகாணத்திற்குரிய பங்கைக் கேட்பதற்குப் போதிய தைரியம் இம்மாநில அமைச்சர்களுக்குக் கிடையாது"

'பெரிய தொழிற்சாலைகளும் அணைக்கட்டுகளும் வடநாட்டில் அமைக்கப்படுகின்றன. குடிசைத் தொழில் என்ற பெயரால் வார்தா நாட்டுச் செக்கு உற்பத்திசெய்யும் உரிமை தென்னாட்டிற்கு வழங்கப்படுகிறது. இந்திய அரசாங்கத்தின் அதிகாரத்திற்குட்பட்ட ஒரு பகுதிக்கு வடநாட்டு அரசாங்கம் வழங்கும் நீதி இதுதான். இம்முறையை போக்கவே தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிடுகிறது."

அக்னி மாதா கோவில் மண்

பாம்பு கடிக்கு மருந்தாம்

புதுடில்லி, ஆக. 8—

"பஞ்சாபில் கங்ரா—பதன்கோட் சாலையில் அக்னிமாதா' கோவில் ஒன்று இருப்பதாகவும் அந்தக் கோவில் மண்ணை பாம்பு கடித்தவர்களுக்கு மேல்பூச்சாகவும், உள்ளுக்கும் உபயோகித்தால் பாம்பு கடிக்கு பலியாக வேண்டியதில்லை என்றும் கூறப்படுகிறதே, இது உண்மைதானா?" என்று, மக்கள் சபையில் ரகுநாத் சிங் என்பவர் கேள்வி ஒன்று எழுப்பியிருக்கிறார்.

'இது குறித்து சர்க்கார் ஆராய்ச்சி நடத்துமா?' என்றும் அவர் கேட்டிருக்கிறார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிர்தகௌரி தெரிவித்ததாவது:—

"பதன்கோட்—கங்ரா சாலையில், மூன்றுபுறச் சுவர்களால் சூழப்பட்ட அக்னி மாதா மேடை ஒன்று இருக்கிறது என்றும் இந்த மேடையில் உள்ள மண்ணை எடுத்துப் பாம்பு கடித்த வாயில் பூசி, அருகில் ஓடும் நீரோடையிலிருந்து தண்ணீர் சிறிது அருந்தவும் செய்தால் பாம்பு கடி குணமாகும் என்றும் பஞ்சாப் சர்க்கார் தகவல் தந்திருக்கின்றனர். இது குறித்து இன்னும் விசாரணை செய்யப்படவில்லை"

காப்பிக்கொட்டை உற்பத்தியை ஆண்டிற்கு 26,000 டன்னிலிருந்து 35,000 டன்னுக்கு அதிகப்படுத்துவதற்காக வகுக்கப்பட்டுள்ள ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை இந்திய சர்க்கார் அங்கீகரித்துள்ளனர்; அத்திட்டத்துக்கு ரூ. 2,95,00000 செலவாகும்.

எவ்வளவு தெரியுமா?

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 4 39,56,000 மணங்கு உருளைக்கிழங்கு உற்பத்தியாகிறது. அதில் 88 சதவிகிதம் சமவெளிகளிலும், 12 சதவிகிதம் மலைப் பிரதேசங்களிலும் உற்பத்தியாகிறதென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் உருளைக்கிழங்கு சாகுபடியின் மொத்த பரப்பளவு சுமார் 5,80,000 ஏக்கராவாகும்.

125–இலட்சம் டன் உருக்கு தேவைப்படுமாம்!

புதுடில்லி, ஆக. 9—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தற்போதைய மதிப்பீட்டின்படி மொத்தம் 125 இலட்சம் டன் உருக்குத் தேவைப்படுமாம்!

'அத்தேவைகள், உள்நாட்டு உருக்கு உற்பத்தி சக்தியை அதிகரிப்பதன் மூலமும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதன் மூலமும் சமாளிக்கப்படும்' என்று மக்கள் சபையில் கூறப்பட்டுள்ளது

2-இலட்சம் ஓட்டுச்சாவடிகள்

18-கோடி பேர் வாக்காளர்கள்

பிப்ரவரியில் நடக்கவிருக்கும் தேர்தல் விபரங்கள்

இந்தூர், ஆக. 8—

அடுத்த பிப்ரவரி திங்கள் முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் இந்தியா பூராவும் தேர்தல் துவங்கிவிடும் என்று, எதிர்பார்ப்பதாகப் பிரதம தேர்தல் அதிகாரி சுகுமார் சென் தெரிவித்திருக்கிறார்.

தொகுதி நிர்ணயக் குழு இன்னும் ஒரு கிழமைக்குள் வந்துவிடும் என்றும், அது இந்த நவம்பர் இறுதிக்குள் வேலைகளை முடித்துக்கொள்ளும் என்றும், அந்தக் குழுவிடம் மக்கள் சாட்சியம் கூற அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்த பொதுத் தேர்தலில் சுமார் 2 இலட்சம் ஓட்டுச்சாவடிகள் அமைக்கப்படும் எனவும், 18 கோடி வாக்காளர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'ஆள் மாறாட்டம் செய்வதைத் தடுக்க அடையாளச் சீட்டு வழங்கும் முறை நிர்வாகக் காரணங்களால் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சோஷலிஸ்டுகளின் 'முதல் தோல்வி'

ஐதராபாத், ஆக. 7—

மாதம் 10 ரூபாய் கட்சிக்குத் தரக்கூடிய ஆயிரம் நன்கொடையாளர்களைத் திரட்ட வேண்டுமென்பது சோஷலிஸ்டு கட்சியின் முதல் திட்டமாக வைக்கப்பட்டிருந்ததாம்.

இந்த சோதனைத் திட்டத்தில் சோஷலிஸ்டுகள் முதல் தோல்வியைச் சந்தித்திருப்பதாகக் கட்சித் தலைவர் லோகியா இங்கு தெரிவித்திருக்கிறாராம்.

"ஏழு மாதங்களுக்கு முன்னால் சோஷலிஸ்டு கட்சி துவக்கப்பட்ட நேரத்தில், மாதம் 10 ரூபாய் கட்சிக்குத் தருபவர்களாக 1,000 பேரைத் திரட்ட வேண்டும் என்று கேட்டிருந்தேன்; தரப்பட்டிருந்த காலவரையறை முடிந்துவிட்டது; இதுவரை 275 பேர்களே திரட்டப்பட்டிருக்கின்றனர். இவர்களிலும் 14 பேர்களின் பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது; காரணம், அவர்கள் பொறுப்போடு நடந்துகொள்ளவில்லை.

"இந்த சோதனை மிகவும் சுலபமான—எளிய ஒன்றுதான்; இதில் ஏற்பட்டுள்ள தோல்வி எனக்கு அச்சமூட்டுகிறது.

"பம்பாயில் 13 பேர்களே இந்த நன்கொடை தருபவர்களாக இருக்கின்றனர். என்பது காண வருந்துகிறேன்.

"சென்னை 8; கல்கத்தா 53; டில்லி 31; ஐதராபாத் 45—என்பதுதான் நன்கொடையாளர் எண்ணிக்கை!

"வரப்போகும் ஆண்டு மாநாட்டிற்குள் கட்சித் தோழர்கள், ஆயிரம்பேரைத் திரட்டிவிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்,"

என்று லோகியா ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

காசியிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு

கச்சாப்பட்டு விநியோகம்

புதுடில்லி, ஆக. 6—

காசியிலுள்ள பட்டு நெசவாளர்களுக்கு, மத்திய பட்டு போர்டு தற்போது ஒவ்வொரு மாதமும் 24,000 பவுண்டு இறக்குமதி ரகப் பட்டு விநியோகம் செய்து வருகிறது.

'காசி பட்டு நெசவுத் தொழிலுக்கு ஒவ்வொரு மாதமும் 24,000 பவுண்டு இறக்குமதி ரகப் பட்டும், 17,000 பவுண்டு உள்நாட்டு ரகப் பட்டும் தேவைப்படுகிறது; சீனாவிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் இவை இறக்குமதியாகின்றன' என்று, மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'மணமான ஆண்களை மணக்கக் கூடாது'

அரசாங்க ஊழியத்திலுள்ள பெண்களுக்கு எச்சரிக்கை

"அரசாங்க ஊழியத்தில் உள்ள பெண்கள், திருமணமாகி மனைவியுடன் வாழும் ஆண்களை, அரசாங்க அனுமதியின்றித் திருமணம் செய்து கொள்ளக்கூடாது" என்று திரு-கொச்சி அரசாங்கம் எச்சரித்துள்ளதாம்.

மனைவியுடன் வாழும் அரசாங்க ஊழியர்கள் மறுமணம் செய்து கொள்ளக் கூடாதென்று அரசாங்கம் ஏற்கனவே சட்டம் இயற்றியுள்ளது.

இந்தியாவில் தேயிலை சாகுபடி பரப்பளவு 1952-53-ல், 7,87,378 ஏக்கராவாக இருந்தது — 1954 56-ல், 7,89,471 ஏக்கராவாக அதிகரித்தது.

ஆசிரியருக்குக் கடிதம்

'கருணை' பிறக்குமா காந்தீய சீடர்களுக்கு?

ஐயா,

சோழவந்தான் சுமார் 20,000 மக்கள்கொண்ட ஓர்நகர்; இந்நகர் மக்களில் பெரும்பான்மையினர், பயிர்த் தொழில் ஒன்றையே நம்பி வாழும் பாட்டாளிகள்; இங்கு வருடத்திற்கு இரண்டு முறை நெல் சாகுபடி செய்யப்படும்.

அதுபோலவே, இவ்வருடமும் பெரியாறு நீர்த் தேக்கத்தில் நீரின் அளவு உயர்ந்தவுடன் ஆனி மாதம் முதல் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது; அதில் சிறிது தண்ணீர் எங்கள் ஊர் கண்மாய்க்கும் வந்தது; நீர் வந்ததும் மக்கள் அவரவர் சக்திக்கேற்றவாறு நாற்று விதைக்க ஆரம்பித்தனர்; இப்போது அவற்றிற்குத் தண்ணீர் கிடைக்காமையினால், அவை வாடி வதங்கிவிட்டதால், மாடுகளுக்குத் தீனியாக உபயோகப்படுத்துகின்றார்கள்.

கண்மாயில் இப்போது சிறிதும் தண்ணீர் இல்லை; பருவ மழையும் இல்லை. கண்மாயில் கிடந்த சிறிது தண்ணீரையும் இவ்வூர் பிரமுகர்கள் எனத் தங்களை எண்ணிக்கொள்ளும் காங்கிரஸ்காரர்கள் தமது வயல்களுக்கும் தமது சகாக்களின் வயல்களுக்கும் சில காலித்தனங்களைக் கையாண்டு தங்கள் நிலங்களை உழுது நட்டுவிட்டனர்; இதற்குக் கண்மாய் 'ஓவர்சியர்'களும் உடந்தையாக உள்ளனர்; அவர்களைக் கண்டு பயமுறுத்துவது, திருட்டுத் தனமாகக் கண்மாய் மடையின் திறவுகோலை வாங்கி இரவோடு இரவாகத் தண்ணீரைத் திறந்து தமது வயல்களுக்குப் பாய்ச்சுவது, காலையில் திறவுகோலை அதிகாரியிடம் கொடுத்துவிடுவது, மறுத்தால் அவர்களை இந்தக் 'கண்ணிய புருடர்'கள் மிரட்டுவது போன்ற செயல்களில் ஈடுபட்டுவருவதாகத் தெரிகிறது.

கண்மாய் வறண்டவுடன் நாற்று நட்ட சில நிலங்களும் வறண்டுவிட்டன; எஞ்னியர்களைக் கண்டு தண்ணீர் திறக்குமாறு கேட்டதற்கு திறந்துவிடுவதாகக் கூறியும் இதுவரை தண்ணீர் விட்டபாடில்லை.

ஆகவே, 'காந்திய சீடர்கள்' எனக் கூறும் காங்கிரசார் இந்நகரத்தை மிகப்பெரிய பஞ்சத்தினின்றும் மீட்க வேண்டுமானால் பணம் கொடுத்துத் தண்ணீர் பாய்ச்சுபவர்களை மேலும் மேலும் உற்பத்தி செய்யாமலும், கண்மாய் 'ஓவர்சியர்'களைப் பயமுறுத்தாமலும் இருந்தால், அதுவே அவர்கள் செய்யும் மிகப் பெரிய பணியாகும்.

வீ. செங்குட்டுவன்
சோழவந்தான்

★

ஆவன செய்வதற்கு

அரசாங்கம் முன்வருமா?

ஐயா,

இந்திய அரசாங்க வர்த்தக—தொழில் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள், 'கைத்தறித் துணிகள் விற்பனை ஆகாமல் தேங்கினால் அரசாங்கம் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறது' என்று அருப்புக்கோட்டையில் பேசியிருக்கிறார். ஆனால், அமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதிப்படி உடனடியாகக் கைத்தறித் துணிகளை அரசாங்கம் வாங்க ஏற்பாடு செய்வார்களா?

தற்சமயப், சின்னாளப்பட்டியில் கைத்தறித் துணிகள் விற்பனை ஆகாமல் அதிகமாகத் தேங்கிக் கிடக்கிறது. இன்னும் ஒரு மாத காலம் வியாபார நிலைமை இப்படியே இருந்தால் கைநெசவுத் தொழிலாளிக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். இந்த நிலைமை எங்கும் தற்சமயம் ஏற்பட்டு இருக்கிறது.

இதனைத் தவிர்க்கவேண்டுமென்றால், உடனடியாக நியாய விலைக்குத் துணிகளை அரசாங்கம் கொள்முதல் செய்யவேண்டும்.

மேலும், 'அடுத்த சந்ததியினர் இதே கைத்தறித் தொழில்களில் ஈடுபடுவார்களா?' என்று ஒரு கேள்விக் குறியை எழுப்பி, அதைப் பற்றி ஆராயவேண்டிய ஒரு சந்தர்ப்பத்தை கனம் அமைச்சர் ஏற்படுத்தியிருக்கிறார். ஏனெனில் வருங்காலத்தில் கைநெசவுத் தொழில் ஒழிக்கப்படவேண்டும் என்று பொருள்படும்படி அவர் பேசியுள்ளார். எனவே, கைநெசவுத் தொழிலாளிகள் தம்முடைய வருங்கால சந்ததிகளைக் கைநெசவுத் தொழிலில் ஈடுபடுத்தாமல் இருப்பதே நலம். ஆனால், பல இலட்சக்கணக்கான கைநெசவுத் தொழிலாளரின் சந்ததிகளை வேறு தொழில்களில் ஈடுபடுத்தவேண்டும் என்றால் அரசாங்கத்தின் உதவியும் வேண்டும். கைநெசவுத் தொழிலாளியின் குழந்தைகளுக்கு உயர்நிலைப் பள்ளிவரை இலவசப் படிப்பு, உத்தியோகத்துறையில் அவர்களுக்கு முதலிடம் தருவது, தொழில்துறையிலும் அவர்களுக்கு முதலிடம் தருவது, கைத்தறிகளுக்குப் பதிலாக விசைத்தறிகளைப் புகுத்தும்போது ஆதாரப்பள்ளிகளில் நூல் நூற்பதையும், நெசவுத் தொழிலையும் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுப்பது முன்னுக்குப் பின் முரணாயிருப்பதால், பள்ளிகளில் நூல நூற்றல், நெசவுத் தொழிலைக் கற்றுக்கொடுப்பதைத் தடை செய்வது போன்ற நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபடவேண்டும்.

கைத்தறித் துணிகள் தேங்குவதை அரசாங்கம் வாங்கும் என்று அமைச்சர் வாக்குறுதி கொடுத்திருப்பதால், 'விசைத்தறியைப் புகுத்தினாலும் பாதகமில்லை' என்று ஏமாறாமல், நாட்டில் உள்ள கைநெசவுத் தொழிலாளிகளும் கைநெசவுத் தொழில் சங்கங்களும், கைநெசவாளர்களுக்காகப் பாடுபடும் அரசியல் கட்சிகளும், கைத்தறியாளர்கள் உள்ள ஊர்களில் அரசாங்கம் தேங்கிக்கிடக்கக்கூடிய கைத்தறித் துணிகளை நியாய விலைக்கு வாங்க உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று போராடவேண்டும்.

ஏ. எம். டி. நாச்சியப்பன்
சின்னாளப்பட்டி

மதுவிலக்கு வழக்குகள்

மாவட்டங்களின் எண்ணிக்கை

'சென்னை நகரசபை உள்பட மாநிலத்திலுள்ள 61 நகர சபைகளில், சேலம் நகர சபையில்தான் அதிகப்படியான குடிபோதை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது' என்று, சென்னை மாநில மதுவிலக்கு இலாகாவின் ஆண்டு அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது

சேலம் முனிசிபாலிட்டியின்கீழ் 20 2 இலட்சம் மக்கள் உள்ளனர்; இவர்களில், 1954-55-ம் ஆண்டில் 2,583 நபர்கள் குடிபோதையில் இருந்ததாகத் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை நகர சபையின்கீழ் 14 16 இலட்சம்பேர் உள்ளனர்; ஆனால் 996 பேர்களே இக்குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றுள்ளனர்.

சேலத்திற்கு அடுத்தபடியாக கரூர் முனிசிபாலிட்டி (திருச்சி மாவட்டம்) இருக்கிறது.

கரூர் மக்கள் தொகை 42,155; அங்கு 10,000 பேர்களுக்கு 100 பேர்கள் குடிபோதையில இருந்ததாகத் தண்டனை பெற்றவர்கள்; மொத்தம் அங்கு 421 பேர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

மூன்றாவது இடத்தை மேட்டுப்பாளையம் முனிசிபாலிட்டி (கோவை மாவட்டம்) அடைந்துள்ளது; அங்கு மொத்த மக்கள் தொகை 26,516; இதில் 272 பேர் தண்டனை பெற்றவர்கள்.

சென்னை, ஆக. 9—

சென்னை பொது சுகாதாரச் சட்டத்திலிருந்து மண்பாண்டத் தொழிலுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்ற சென்னை நகர சபையின் கோரிக்கையை சென்னை சர்க்கார் நிராகரித்துவிட்டது; கடந்த மார்ச் 8-ந் தேதியன்று நடைபெற்ற நகரசபைகூட்டத்தில் அக்கோரிக்கைக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அகமதாபாத் சம்பவங்கள்..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தொடர்ந்து தடையுத்தரவுகளை மீறிய கூட்டத்தினரை ஒடுக்குவதற்காக ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்யவும், போலீசாருக்குத் துணைபுரிய இராணுவமும் அழைக்கப்பட்டிருக்கிறதாம்.

14 இடங்களில் துப்பாக்கிப் பிரயோகமும் எண்ணற்ற இடங்களில் கண்ணீர்ப் புகை, தடியடிப் பிரயோகமும் நிகழ்ந்திருக்கின்றன.

மொத்தமாக காயம் பட்டோரின் எண்ணிக்கை சுமார் 200 என்று அதிகார வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள், தங்கள் மீது கொடிய அடக்குமுறை மூர்க்கத்தனமாக ஏவப்பட்டதால் கொதித்துப்போன நிலையில், போலீஸ் நிலையங்கள் சிலவற்றைத் தாக்கி சிலவற்றிற்குத் தீமூட்டினர் என்றும் அதிகார வட்டாரங்கள் கூறப்படுகின்றன.

1947 ஆகஸ்டு 15-க்குப் பிறகு இப்போதுபோல் வேறெப்போதும் அகமதாபாத் நகரில் சம்பவங்கள் நடைபெற்றதில்லையாம்.

இந்தச் சம்பவங்களை ஒட்டி, ஆறு கம்யூனிஸ்டு தலைவர்கள் உட்பட 50 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

நகரில் நடுச்சியின் போது அமைதி நிலவத் தொடங்கியிருப்பதாகப் போலீசார் தெரிவித்திருக்கின்றனர்.

அகமதாபாத் நகரில் துவக்கிய ஆர்ப்பாட்டங்கள் இப்போது, குஜராத்தின் இதர பகுதிகளுக்கும் பரவியிருப்பதாகத் தெரிய வருகிறது.

பரோடா நகரில் ஆர்ப்பாட்டக்காரர்களின் வேண்டுகோளுக்கு ஒப்ப கடைகளை மூட மறுத்த வியாபாரிகளுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே தோன்றிய கைகலப்பை ஒட்டி, நகர நீதிபதி 24 மணி நேரத்திற்கு ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனம் செய்திருக்கிறாராம்.

இதேபோல, பால்வா எனும் இடத்திலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது.

மேலும், பம்பாயிலும் சுமார் 3,000 மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர்.

குசராத்தி கடைவீதிகள் மூடப்பட்டிருக்கின்றன.

மாலையில், குசராத்திப் பகுதிகளில், இருமொழி பம்பாய் மாநில அமைப்பிற்கு எதிராக பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

வெறிச்சோடிக் கிடக்கும் அகமதாபாத் நகரில், தொடர்ந்து 'சத்தியாக்கிரக' இயக்கம் ஒன்று நடத்தப்போவதாகக் கம்யூனிஸ்டு பி. சோ. கட்சிகள் அறிவித்திருக்கின்றன.

இதற்கிடையில், பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய் பம்பாய் இளைஞர் கூட்டம் ஒன்றில் பேசும்போது, மக்களை அமைதியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறாராம்.

'குசராத்தின் நலன்களுக்கு நான் துரோகமிழைத்துவிட்டதாக சிலர் நினைக்கலாம்; அது உண்மையல்ல. ஒரு கிராமத்தின் நலனை, தாலுகாவின் நலனுக்காகத் தியாகம் செய்ய வேண்டுவது அவசியம்; அதுபோல, தேசத்தின் நலனுக்காக ஒரு பிரதேசத்தின் நலன்களைத் தியாகம் செய்யவும் வேண்டும்; அப்படி ஒன்றும் நாம் இப்போது தியாகம் செய்துவிடவில்லை. எனவே, மக்கள் அமைதியாக இருக்க வேண்டும். அகமதாபாத் கிளர்ச்சி தேவையற்றது; அதனை ஒடுக்கியே தீருவோம்" என்றும் தேசாய் கூறினாராம்.

ஐந்தாண்டுத் திட்ட........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தயாரிப்பதற்காக! இதேபோல, ஒவ்வொரு வட்டார மொழியிலும் 20 இசைத்தட்டுகள் தயாரிக்கின்றனராம்!

இதுவன்னியில், பள்ளி மாணவர் அனைவருக்கும் திட்டம் பற்றிச் சொல்லித் தருவதற்காக பாடப் புத்தகங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றனவாம்!

கழகக் கூட்டம்

★

தேவகோட்டை :
நேதாஜி சதுக்கத்தில்
12—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
இராம. வெள்ளையன் எம்.சி.
பேசுவோர் :
அண்ணா
கண்ணதாசன்

★

குத்தாலம் :
நகரப் பூங்காவில்
12—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
என். கிட்டப்பா
பேசுபவர் :
மு. கருணாநிதி

★

நாகூர் :
சிவன் தெற்கு வீதியில்
12—8—56 மாலை 6 மணிக்கு
பேசுபவர் :
கி. மனோகரன்

தோழர் இ. எம். அனீபா இன்னிசை வழங்குவார்.

★

சித்தூர் :
அண்ணாமலைமுதலியார் தோட்டம்
காந்திச்சாலை
தி. மு கழக 2-வது ஆண்டு விழா
12—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
கே. பார்த்தசாரதி
பேசுவோர் :
முகவை-ஆர்.எஸ். பாண்டியன்
ஏ. எல். சி. கிருட்டிணசாமி
அ. கருத்தோவியன்
கேசவன்
வி. நரசிம்மன்

★

காஞ்சீபுரம் :
பிள்ளையார் பாளையம்—
புதுப்பாளையத் தெரு
தி. மு. கழக 6-வது ஆண்டு விழா
12—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
டி. கந்தசாமி எம்.சி.
பேசுவோர்:
ப. உ. சண்முகம்
என். ஜீவரத்தினம்
போளூர்-சுப்பிரமணியம்

★

ஆமிந்தாநல்லூர் :
பெருமாள் கோவில் முன்பு
தி. மு. கழகக் கிளை துவக்க விழா
12—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
பொ. கோபால்
பேசுவோர் :
கோ. வெற்றிவீரன்
கா. நெடுமாறன்

சென்னை 37-வதுவட்ட தி. மு. க. செயற் குழு உறுப்பினர்களுக்கு:

சென்னை—இராயப்பேட்டை கழகப்பணிமனையில், 10—8—56 இரவு 8-30 மணிக்கு, கழகச்செயற் குழுக்கூட்டம் நடைபெறும். வரவு-செலவு கணக்கு, மற்றும் சில முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

சென்னை 16-வதுவட்ட தி. மு. க. செயற் குழு உறுப்பினர் கூட்டம்

12-8-56 காலை 9 மணிக்கு கழகப் பணிமனையில், 16-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது, தேர்தல் நிதி சேர்த்தல், தேர்தல் பிரசாரக் குழு அமைத்தல், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

சென்னை 39-வதுவட்ட தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம்

12-8-56 காலை 10-30 மணியளவில், கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தரக் கோரப்படுகிறார்கள்.

இராமநாதபுர மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழகச்

செயற்குழுக் கூட்டம்

12—8—56 மாலை 3 மணிக்கு, விருதுநகர் நாடார் பரிபாலன சங்கக் கட்டிடத்தில் கீழ்க் கண்டவற்றை ஆராய்வான் வேண்டி நமது மாவட்டக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது தாங்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

ஆய்வுக்கு வருவன: வரவு-செலவு ஒப்பேற்றல்; மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்; மாவட்ட மாநாடு நடத்துவது குறித்து; அருப்புக்கோட்டை நகர தி. மு. க.-வின் வேண்டுகோள் தீர்மானம்; உறுப்பினர் கோணர்வன,"

விருதுநகர் எம். எஸ். பெரியசாமி படிப்பக ஆண்டு விழாவில் சம்பத்

12—8—56 காலை 9 மணிக்கு மேற்படி படிப்பகத்தின் மூன்றாவது ஆண்டு விழா, பாப்பாரப் பட்டித் தெருவிலுள்ள படிப்பகத்தின் முன்னிலையில், தோழர் கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், எஸ். இரத்தினம். அரங்கநாதன் ஆகியோர் பேசுவர்.

அன்று இரவு 7 மணிக்கு, அம்மன்கோயில் பொட்டலில், ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் எஸ். இரத்தினம் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், அரங்கநாதன், சுப்பையா, கே. சுப்பிரமணியம் ஆகியோர் பேசுவர்

குடந்தை இளைஞர் தமிழ் மன்ற ஆண்டு விழாவில் பொதுச்செயலாளர்

12—8—56 மாலை 5 மணிக்கு, குடந்தை தவரக்குறிச்சித் தெருவில், மேற்படி மன்ற 5-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் தோழர் சி. பா. ரெங்காச்சாரி தலைமையில் நடைபெறும். தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் துவக்க விழாவாற்றுவார். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் என். கிட்டப்பா விரிவுரையாற்றுவர். ஜேம்ஸ் குழுவினர் இன்னிசை வழங்குவர்; தி. மு. கழக மாநில மாநாட்டு நிகழ்ச்சிகள் திரையிடப்படும்.

திருக்குறள் வகுப்பு

சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டைத் தாய்மார் கழகச் சார்பில் 11—8—56 பிற்பகல் 2½ மணிக்கு, சென்னை—1, முத்துக்கிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். பேராசிரியர் மயிலை சிவ-முத்து அவர்கள் 'இடுக்கணழியாமை' என்னும் பொருள் பற்றித் தொடர்ந்து சொற்பொழிவாற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

11—8—56 இரவு 9 மணியளவில், ஆரணியில் (பொன்னேரி வட்டம்), தோழர் கிருஷ்ணன் தையற்கடையில் தி. மு. கழகச் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். 'நமது நாட்டுக் கடவுளர்கள்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

12—8—56-ல், கோவை அழகிரி நினைவுப் படிப்பகச் சார்பில், 'விடுதலைக் கிளர்ச்சி' என்ற தலைப்பில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

தூளை நகர இளைஞர் கழகம்

பெர்னார்ட் ஷாவின் நூற்றாண்டு விழா 11—8—56 மாலை 6-30 மணிக்கு, எண் 10, மாணிக்க செட்டித் தெரு, கழக மனையில் தோழர் ஏ. பி. பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெறும். தோழர் ஜி வி. சிவப்பிரகாசம் 'பெர்னார்ட் ஷா' என்ற தலைப்பில் பேசுவார்.

தென்னாற்காடு மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழகச்

செயற்குழுக் கூட்டம்

12-8-56 காலை 10 மணிக்கு, கடலூர் (என். டி.) 'ஓட்டல் பிருந்தாவன'த்தில், தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

நிகழ்ச்சிக் குறிப்பு :
(1) எனது விலகல் கடிதத்தை அங்கீகரித்தல் ;
(2) மாவட்டச் செயலாளர் தேர்வு ;
(3) புதிய செயலாளரால் கொண்டு வரப்படும் தீர்மானங்கள்.

தேர்தலை நடத்திவைக்க துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன்அவர்கள் வருகிறார்.

உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தர வேண்டுகிறேன்."

என்று, தெ ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் இரா. சாம்பசிவம் அவர்கள் அறிவிக்கிறார்.

தஞ்சை மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழக

உறுப்பினர் கூட்டம்

"12—8—56 காலை 9-30 மணிக்கு, தஞ்சாவூர் பூக்காரத் தெரு நாடார் தோட்டத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் நடைபெறும். அவ்வமயம், பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட இருப்பதால் மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் வந்திருந்து ஆய்வுரைகள் வழங்கி கூட்டத்தைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்,"

என்று, தஞ்சை மாவட்ட தி. மு க. செயலாளா தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் அறிவிக்கிறார்.

வடாற்காடு மாவட்ட தி. மு. கழகக் கூட்டம்

"12-8-56 மாலை 2 மணிக்கு, வாணியம்பாடியில், தோழர் முல்லை-வடிவேல் அவர்கள் இல்லத்தில், வடாற்காடு மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் மாநில மாநாட்டின் தீர்மானங்களைப் பற்றியும் பொதுத் தேர்தலைப் பற்றியும் ஆலோசிக்கப்படும். உறுப்பினர்கள் தவறாது வருகைதர வேண்டுகிறேன்,"

என்று, வடாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் முல்லை-சத்தி அறிவிக்கிறார்.

மதுரை மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழகச்

செயற்குழுக் கூட்டம்

12-8-56 காலை 10 மணிக்கு மதுரை—தல்லாகுளம், இராமநாதபுரம் மாவட்டக் கழக அலுவலகத்திற்கு எதிரில் உள்ள மண்டபத்தில், மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம், மதுரை மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது வரவேண்டுகிறேன்,"

என்று, மதுரை மாவட்ட தி மு. கழகச் செயலாளர் எஸ். முத்து அவர்கள் அறிவிக்கிறார்.

வாராந்திரக் கூட்டம்

11—8—56 மாலை 6½ மணியளவில் சென்னை—கோமளீசுவரன் பேட்டை முன்னேற்ற சங்கத்தில் (68, ஆரீஸ் ரோடு) திரு. ஆர். சண்முக சுந்தரம் அவர்கள், 'செல்வம் நிலையாமை' என்பது குறித்து விரிவுரையாற்றுவார்.

********-******-***

சென்னை 18-வது வட்டத்தில்

அண்ணா

அவர்களின் சொற்பொழிவு

★

26—8—56 ஞாயிறு மாலை 6-மணிக்கு புளியந்தோப்பில் நடைபெறும் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

*******-*-*********

பெயர் சூட்டு விழா

12—8—56 மாலை 6 மணிக்கு, சென்னை 19-வது வட்ட தி மு. கழகச் செயலாளர் டி. நடராசன் அவர்கள் மகளுக்கு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் பெயர் சூட்டு விழா நடைபெறும்; தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள் பாராட்டுரை வழங்குவார்; இன்னிசை: ஏ எஸ். கஜபதி—ஆர். நடராஜ் குழுவினர்; நடனம்: பேபிசுசுக்தி—குமாரி வனமாலா குழுவினர்.

அண்ணா

சுற்றுப்பயணம்

ஆக. 11 : வலங்கைமான்
12 : தேவகோட்டை
19 : காலை-பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20 : காலை-சேலம
மாலை-குளத்தூர்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஆக. 11 : ஆலங்கோட்டை
12 : குடந்தை

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஆக. 12 : கடலூர்
15 : பண்ணைக்காடு
16 : சிவகிரி
17 : திண்டுக்கல்
18 : சின்னத்தம்பி பாளையம்
19 : காலை-பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20 : காலை-சேலம்

இலக்கியப்பேரவை விழா—பாராட்டு விழா

12-8-56-ல், திருச்சி நாட்டாண்மைக் கழகத் தமிழாசிரியர் கழகச் சார்பில், லால்குடி கழக உயர்நிலைப்பள்ளியில் திருக்குறள்—இலக்கியப் பேரவை விழா—புலவர் அ நடேசன் அவர்களுக்குப் பாராட்டு விழா முறையே திரு. அ. சாம்பசிவம் எம்.எல் ஏ., கு. வரதராசன் ஆகியோர் தலைமையில் நடைபெறும். விழாவினை குன்றக்குடி அடிகளார் துவக்கிவைப்பார். காலை 9-மணிக்கு ஊர்வலம் நடைபெறும். திரு. இராசா சிதம்பரம், முருகேசன், அன்பில் தருமலிங்கம், வே. ஆறுமுகம், தி. கு. இராமநாதன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

பிற்பகல் 3 மணிக்கு, இலக்கியப் பேரவை விழாவில் திரு. தோ. மு. நல்லசாமி அவர்கள் திருவள்ளுவரின் படத்தைத் திறந்துவைப்பார். திரு. வி. உலகவூழியர், அன்பு கணபதி, அ. சிதம்பரநாதன் மா. இராசமாணிக்கனார் ஆகியோர் பல தலைப்புகளில் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.